**O.S.No.334/2007**

**PW1 :** புவனேஷ்வரி                                   தேதி 29.10.2025

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி நிறுவனத்தில் நான் என்ன பொறுப்பு வகிக்கிறேன் என்றால் நான் ஒரு இயக்குநராக (Director)இருக்கிறேன். 2ம் பிரதிவாதி நிறுவனம் எத்தனை இயக்குநர்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் 6 பேர் என்று நினைக்கிறேன் ஞாபகத்தில் இல்லை. 2ம் பிரதிவாதி நிறுவனத்தில் எனக்கு நேரடியான பொறுப்பு எதுவும் இல்லை என்றும் அதன் விவரங்கள் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நிறுவனத்தின் சங்கதிகளை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 9.2.98 ல் என் கணவர் இறந்த பிறகு எனக்கு தெரிய வந்தது. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி சிட்டி வங்கியை எதற்காக தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றால் அவர்கள் 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு லோன் கொடுத்த வகையில் 2ம் பிரதிவாதி நிறுவனத்தை 1ம் பிரதிவாதி வங்கி undertake செய்து கொண்டார்கள். undertake செய்துகொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என் கணவர் இறந்த பின்னிட்டு 2 ம் பிரதிவாதி நிறுவனத்தில் நான் இயக்குநராக இருந்தாலும் நிர்வாகத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. சின்னசாமி என்பவர் தான் நிர்வகித்து வந்தார். 1ம் பிரதிவாதி வங்கி 2ம் பிரதிவாதி நிறுவனத்தை undertake செய்து கொண்ட விவரம் சின்னசாமிக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வங்கி மேலாளர் என்னையும் விசாரித்தார். 1ம் பிரதிவாதி வங்கியிடம் என்ன காரணத்திற்காக நாங்கள் கடன் வாங்கினோம் என்றால் 2ம் பிரதிவாதி நிறுவனத்தை நடத்துவதற்காக வாங்கினோம். 1ம் பிரதிவாதி

வங்கியில் நானும் என் கணவரும் ராஜி தங்கம் processing unit க்காக கடன் வாங்கினோமா என்றால் சரிதான். processing unit க்காக வாங்கிய கடனை திருப்பி செலுத்தாததால் 1 ம் பிரதிவாதி வங்கி மேற்படி கடன் பேரில் DRT OA 185/2001 ஐ என் மீதும் என் மாமியார் மற்றும் என் குழந்தைகள் பெயரில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். என் பெயரில் குடும்ப சொத்து என்ன என்ன உள்ளது என்றால் 4 ஏக்கர் 70 சென்ட் தோட்டம் என் பெயரில் உள்ளது. அதன் மதிப்பீடு எவ்வளவு என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது என்னிடம் பண வசதி இல்லை என்றும் அதனால் வறியர் என்ற முறையில் நீதிமன்ற கட்டணம் செலுத்துவதை விலக்கழிக்க வேண்டும் என்று மனு செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கை நானும் என் மாமியார் தங்கம்மாளும் சேர்ந்து தான் தாக்கல் செய்தோம். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது என் மாமியார் தங்கம்மாள் இறந்து விட்டார். என் மாமியார் 2 ம் பிரதிவாதி நிறுவனத்தில் இயக்குநராக இருந்தாரா என்றால் இல்லை அவரும் ஒரு பார்ட்னராக இருந்தார். என் மாமியார் இயக்குநராக இல்லாத நிலையில் எந்த முகாந்த நிலையில் வாதியாக வழக்கில் சேர்த்து வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் என் மாமியார் பங்குதாரர் என்பதால் அவரை இவ்வழக்கில் சேர்த்தேன். என் மாமியாருக்கு சொத்துகள் எதுவும் இல்லை. என் மாமியாருக்கு 3 ஆண் மக்கள் ,1 பெண் வாரிசாவார். என் மாமியார் இறந்த பின்னிட்டு அவருடைய வாரிசுகளை இவ்வழக்கில் வாதிகளாக சேர்க்கவில்லை. என் மாமியாருடன் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டு அவர் இறந்த பிறகு அவர் வாரிசுகளை சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் சின்னசாமி மற்றும் பழனிசாமி ஆகியோர் என்

கணவருடன் பிறந்த சகோதரர்கள். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என் கணவர் இறந்த பிறகு 2ம் பிரதிவாதி நிறுவனத்தை நிர்வகித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நொடித்தவர்கள் என்று சொல்லியிருக்கிறேன் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கோபாலகிருஷ்ணன் 2ம் பிரதிவாதி நிறுவனத்தின் Chairman காக நிர்வகிப்பட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி நிறுவனத்தில் என்ன நடக்கின்றது எனக்கு தெரியாது என்றும் 1ம் பிரதிவாதி வங்கியின் கடனை ஏமாற்றும் எண்ணத்தில் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வங்கியின் அப்போதைய மேலாளர் பாலசுப்ரமணியன் 1ம் பிரதிவாதி வங்கியின் நிர்வாக அதிகாரிகளின் ஆலோசனையின் படியும் கோபாலகிருஷ்ணன் என்பவரை Chairman காக நியமனம் செய்யப்பட்டதாக சொல்லப்படுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என் கணவர் இறந்த பின்னிட்டு 1.8.1998 முதல் 9.5.1999 வரை 2ம் பிரதிவாதி நிறுவனம் இயங்கி வந்தததற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி நிறுவனத்தில் சுமார் ரூ.1,18,00,000/- லாபம் சம்பாதிக்கப்ப்படடதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதற்குரிய ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி நிறுவனத்தை யாரை முன்னிலைப்படுத்தி தரப்பினராக வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் யாரையும் முன்னிலைப்படுத்தவில்லை. நான் நிறுவனத்தையே 2ம் பிரதிவாதியாக காட்டியிருக்கிறேன். தற்போது 2ம் பிரதிவாதி நிறுவனம் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி நிறுவனம் தற்போது சொத்தாட்சியர்

கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது அவ்வாறு இல்லை. நிறுவனத்தில் ஏற்பட்ட சங்கதிகளை நான் வழக்கில் சொல்லவில்லை என்றும் அதனால் வழக்கிற்கு வியாசிய மூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி நிறுவனத்தில் நான் எந்த வகையிலும் நிர்வாகம் செய்யாத நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்தவித முகாந்திரம் இல்லை என்றும் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் கணவர் இறந்த பிறகு 2 ம் பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து லாபம் வந்ததாக சொல்லியிருக்கிறேன். அதே போல் என் கணவர் உயிருடன் இருக்கும் போது 2 ம் பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து லாபம் வந்தது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி வங்கிக்கு நானும் என் கணவரும் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தியிருந்தால் வங்கி எங்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களுக்கும் எனக்கும் நேரடியாக தொடர்பு இல்லை என்றும் 1 ம் பிரதிவாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக அந்த அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை பெற்று தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்பதால் மேற்படி ஆவணங்கள் வழக்கில் ஏற்ககூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உரிய அதிகாரிகள் மூலம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் என் மூலமாக தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பாரா 14 ல் 3 மற்றும் 4 பிரதிவாதிகளான என் கணவரின் உடன்பிறந்த சகோதரர்கள் தான் கடனை கட்ட கடமைபட்டவர்கள் என்று சொல்லியிருக்கிறேன். நான் இவ்வழக்கில் 1 ம் பிரதிவாதியை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் நாங்கள் வாங்கிய கடனை

செலுத்துவதில் இருந்து தப்பிப்பதற்காக 1ம் பிரதிவாதியை தரப்பினராக இவ்வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி DRT தீர்ப்பாயத்தின் மூலம் என் மீது நடவடிக்கை எடுத்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றும் எனக்கு சாதகமான விசயங்களை கூறி இந்த வழக்கை ஜோடனை செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 1ம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.